# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2014 விடை 29 ( 12 - 6 - 1983) விலை 65 காசு — இதழ் எண்: 20 | பகுதி 27-28


## ★ ஈழத் தமிழர்க்கு இரண்டகம் செய்கிறார் தமிழர் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம்!

## ★ நூற்றுக்கணக்கான இளைஞர்களும், அறிஞர்களும் சிங்களப் படையினரால் கொடுமைப்படுத்தப்படுகையில், பாராளுமன்றப் பதவி நமக்குத் தேவையா ?

### ★ தலைவர் அமிர்தலிங்கம் வரலாற்றில் அவப்பெயர் பெறக்கூடாது! அவர் சிந்தித்துத் தம்மைத் தலைநிமிர்த்திக் கொள்ள வேண்டும்!

### ★ உ. த. மு. க. அன்பர்கள் அமிர்தலிங்கத்திற்கு வேண்டுகோள் மடல்கள் அனுப்புக!

## ★ பாவலரேறு அறிக்கை!

கடந்த மே மாதம் தமிழீழத்தில் மீண்டும் படைத்துறை கட்டவிழ்த்து விடப்பட்டு, அங்குள்ள தமிழர்களுக்குப் பெருத்த அழிவும் இழப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன. இலங்கைக் குடியரசுத் தலைவர் செயவர்த்தனே கொஞ்சமும் ஈவு இரக்கமில்லாமல் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கிறார். தீவிர இளைஞர்களை அடக்குவதாகக் கூறிக்கொண்டு, படைத்துறையினரையும் பாதுகாவல் துறையினரையும் கொண்டு, தமிழீழத்தில் உள்ள ஆதரவற்ற தமிழ்ப்பொது மக்களை அழித்து வருகிறார் செயவர்த்தனே!

மருத்துவர் எசு. இராசசுந்தரம் என்னும் காந்திய இயக்க அமைப்புச் செயலாளரையும், அந்த இயக்கத்தின் கட்டிடக் கலைஞர் எசு. ஏ. டேவிட் என்பாரையும் கடந்த 6—4—83 அன்று சிறைப்படுத்தி அவர்களை மிகக் கொடுமைகளுக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள் அவர்களுடன் அவ்வியக்கத்தைச் சார்ந்த சில இளைஞர்களையும் பணியாளர்களான பெண் தொண்டர்களையும் உசாவலுக்கு அழைத்துச் சென்று, அவர்களைத் தாறுமாறாக நடத்திக் கொடுமையும் இழிவும் படுத்தியிருக்கின்றனர்.

பனாகொடை தடுப்புக் கொட்டடியில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் டேவிட் அவர்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகவும், அவரது மன நிலை, படையினரின் தாக்குதலால் மிகவும் ஊறுபட்டிருப்பதாகவும் தெரிகிறது. காந்திய இயக்கச் செயலராகிய மருத்துவர் இராசசுந்தரம் அவர்களின் மேல் படைத் துறையினர் மிகவும் கொடுமையாகத் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். அவர் முகத்திலும் உடம்பிலும் மண்ணை வாரி வீசியிருக்கின்றனர். அவரின் வயிற்றிலும் தலையிலும், தோள் முட்டியிலும் இரும்புத் தடியால் குத்தியும் அடித்தும் துன்புறுத்தியிருக்கிறார்கள். இரவு முழுவதும் அவரைத் தூங்க விடாமல் தாக்குதல் நடத்தியதால் அவர் மன நிலையிலும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அவர் அம்மணமாக்கப்பட்டு இங்கும் அங்கும் இழுத்தடிக்கப்பட்டிருக்கிறார். அந்த நிலையிலேயே ஓர் இரவு முழுவதும் வைத்துக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள் படைத்துறைக் கயவர்கள்.

அதே பனாகொடைக் கொட்டடியில் சிறைப்படுத்தப்பட்ட இளைஞர்கள் அனைவரும் இரவு முழுவதும் அம்மணமாக ஆக்கப்பட்டுத் தலைகீழாகக் கட்டித் தொங்க விடப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்டுள்ளனர். கண்களில் பட்ட இளைஞர்களையெல்லாம் ஐயத்தின் பேரில் தளை செய்து. படைத்துறைக் கொட்டடிகளுக்கு அழைத்துச் சென்று கொடுமை செய்கின்றனர்.

மட்டக் களப்பில் புதூர் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களையும் பொது மக்களையும் அங்குள்ள வான் படையைச் சேர்ந்த சிங்களக் காடையர்கள், காரணமின்றித் தாக்கித் துன்புறுத்தி, அவர்கள் வளர்த்து வந்த ஆடுகள், மாடுகள், கோழிகள் முதலிய கால்நடைகளையெல்லாம் வலுக்கட்டாயமாக ஓட்டிச் சென்று தங்கள் உணவுக்காக அடித்துக் கொன்று பயன்படுத்தியிருக்கிறார்கள்.

நுவரெலியா என்னும் மலைப்பகுதி ஊரில் கடந்த 14-5-83 காலையில் திடுமென வந்திறங்கிய காவல் படைச் சிங்களவர், அங்குள்ள இளைஞர்களையும் அகவை முதிர்ந்த ஆடவர்களையும் அடித்து நொறுக்கியதுடன், அவர்களுக்கு ஆதரவளித்து வந்ததாக டொரீன் பால. சிங்கம் என்ற பெண்மணியையும் அந்தோணி, சிவலிங்கம்,

(6-ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், [illegible] ஆகிய ஏழு துறைகளிலும்
உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உன்னத [illegible] உ. த. மு. க.

# ஆங்கில மொழிக் கல்வியால் நாட்டுப்பற்று இல்லாமற் போகிறது!

## நாட்டில் நிலவும் பலவகைத் தீமைகளுக்கும் அதுவே காரணம்!

### அமைச்சர் அரங்கநாயகம் கருத்து!

"மாணவர்கள் தொழில் நுட்ப, மருத்துவ, உயர் கல்வியை ஆங்கிலம் வாயிலாகப் பெறுவதால் தான், தாங்கள் சார்ந்துள்ள மாநிலத்திற்கும் இந்திய நாட்டிற்கும் உண்மையான நன்றியுடையவர்களாக இருப்பதில்லை. இந்நாட்டு மக்களின் வரிப் பணத்தில் உயர்கல்வி கற்பவர்கள் எந்த நாட்டில் வேலைக்கு ஓடலாம் என்னும் நோக்கத்துடனேயே வாழ்கிறார்கள், இவர்களைப் படிக்க வைப்பது பிற நாட்டினரை நம் பணத்தில் படிக்க வைப்பது போலாகும்.

ஆங்கில மொழி மூலமாகக் கல்வி கற்பதனால் மக்கள் நாட்டுப் பற்று இல்லாதவர்களாக உருவாகின்றனர். இன்று நிலவும் பலவேறு தீமைகளுக்கும் ஆங்கிலக் கல்வியே காரணம். ஆங்கில மொழி மூலம் படிப்பவர்கள் அந்த மொழியில் பேச, எழுத வேண்டுமானால் முடியும். ஆனால் அம்மொழி மூலம் கற்பவர்கள் தற் சிந்தனை அற்றவர்களாகப் போய்விடுகின்றனர். தாய் மொழியில் உயர்கல்வி அளித்தால் மாணவர்கள் நம் நாட்டு மக்களைப் பற்றிக் கவலைப்படுபவர்களாக வளர்கிறார்கள். அவர்களுடைய ஆற்றலும் அறிவும் நம் இனத்திற்கு முழுமையாகப் பயன்படும்."

சென்னையில் ஒன்றிய நாடுகள் குழந்தைகள் நலக்காப்பு நிறுவனத்தின் (யுனிசெப்) சார்பில் பணிமனைகளைத் தொடக்கி வைத்து சூன் 1-ஆம் நாள் கல்வியமைச்சர் அரங்கநாயகம் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

# வீட்டில் தமிழில் பேசுவோம் இயக்கம் மலேசியாவில் தொடங்கும்

சூன். 3 — 'மலேசியத் தமிழர்களின் இல்லங்களில தமிழில் தான் பேச வேண்டும் என்பதை வலியுறுத்தி மக்கள் இந்தியப் பேராயம் சூன் 3-ஆம நாள் பினங்கில் ஓர் இயக்கத்தைத் தொடங்கி வைக்கும்' என்று மலேசிய பொதுப்பணி பயனீட்டுத் துறை அமைச்சர் டத்தோ ச. சாமிவேலு ஒரு விழாவில் குறிப்பிட்டார்.

"சென்னை நகரத்திற்கு நான் சென்ற போது, அங்குள்ள ஒருவரிடம குறிப்பிட்ட இடத்தின் பெயரைச் சொல்லி, அங்குச் செல்வதற்கு வழி என்ன என்று வினவிய பொழுது, அந்தத் தமிழர் வழியை ஆங்கிலத்தில்தான் சொன்னார்."

தொன்று தொட்டு வந்த தமிழ் மொழியை ஒரு தமிழன் மற்றொரு தமிழனிடம் பேசுவதற்கு வெட்கப்படும் காலம் இது. இதனை மாற்ற வேண்டும் என்பதற்காகவே ஒவ்வொரு தமிழரின் இல்லத்திலும் தமிழ் பேசப்பட வேண்டும் என்றும், அவ்வாறு பேசப்படுவதற்குப் பெற்றோர்கள்தாம் முன்னோடியாக விளங்க வேண்டும என்றும், அவர் கேட்டுக் கொண்டார்.

பெற்றோர்கள் இல்லங்களில் தமிழில் பேசினால் தான் பிள்ளைகளும் தமிழில் பேசுவார்கள் என்றார். தமிழில் பேசுவோம் என்ற இயக்கத்தை சூன் 3 ஆம் நாள் தொடங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழின் சிறப்பையும், தமிழின் தொன்மையையும் நம்முடைய பண்பாட்டையும் நாம் மறந்தவர்களாக இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம. இந்த நிலை மாற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வீட்டில் ஆங்கில மொழியிலேயே பேசும் ஒரு மாணவன் பெரியவனானதும் அவனுடைய பழக்க வழக்கங்கள் மாறித் தன்னுடைய பெற்றோர்களிடம் கூட மதிப்பில்லாமல் நடக்கக் கூடிய காலமும் வரும் என்றும அவர் கூறினார்.

—நம் மலேசியச் செய்தியாளர்
நாரண திருவிடச்செல்வன், கூலிம்.

> **அன்பர்கள் கவனிக்க...**
>
> பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறுக் கேட்டுக் கொள்கிறோம். வெளியூரிலிருந்து வரும் அன்பர்கள் முன் கூட்டி இசைவு பெற்று வரவும்.
>
> —அமைச்சர்.

உ.த.மு.க. உறவு மடல்!

# கலை, இலக்கியத் துறையில் நாம் இறங்கியாக வேண்டும்!

'உருசியப் புரட்சியின் கண்ணாடி' என இலெனினால் வண்ணணை செய்யப்பட்ட மாபெரும் உருசிய எழுத்தாளன் 'தால்சுதாய் (Tolstoy)', என்று இரகுநாதன் குறிப்பிட்டுள்ளார். தாலசுதாய் புதினம, சிறு கதைத் துறையில் வல்லவர்.

குமுகாயத்தைப் புரட்டிப் போடும் நெம்புகோல்களாகச் சிறு கதைகள் செயல்படும் கலை இலக்கியத் துறைகளில் நாம் இறங்கியாக வேண்டும.

குண்டும் குழியும், சேறும் நீரும் கலை இலக்கியத்தை நெருங்க முடியாதபடி நாற அடித்துள்ளன. என்றாலும், சாய்க்கடையை வாரி எறிய உள்ளே இறங்கித்தான் ஆகவேண்டும். ஒட்டடையும் தூசியும் தாமே விலகா. எனவே, நாம் 'கலை இலக்கியத் துறை'யை மாசு பிடித்துள்ளது என்பதால் விலகி நிற்க முடியாது.

சிறுகதைகளும், புதினங்களும் நம் மொழி இயல்புக்கு வேறானவை அல்ல. அவற்றைக் கையாள நாம் கலை இலக்கியக்காரர்கள முன் வருதல் வேண்டும்.

பாவலரேறும் — தென்மொழி எழுத்தாளருமே கதைத்துறையில் கால் வைக்க வேண்டுமென்பதில்லை. புதிய முயற்சிகள் பெருகட்டும். நம் பண்பாட்டு நெறிக்குச் சிறு கதைகள் பகையாகா! அதைப் படைக்கும் கண்ணோட்டத்திலேயே நமக்குக் கருத்து வேறுபாடு. எனவே, படைப்பில் நம் பண்பாடு வெளிப்படும். ஏனெனில் நம் கண்ணோட்டம் சீர்மையானது செம்மை சான்றது!

நமது நீண்டகால நோக்கில் பல்வேறு படைக்கலன்களை உருவாக்குதல் வேண்டும். அவற்றை மக்களின் வாழ்கின்ற தகுதிக்கேற்ப எடுத்து வழங்குதல் வேண்டும்.

எனவே, பாசறையன்பர்களே, 'தமிழ்நில'த்தில் சிறு கதைகள் தோன்ற — உங்கள் கண்ணோட்டத்தைக் கூர்மைப் படுத்திக் கொள்ளுங்கள்.

-பறம்பை அறிவன்

நூல் அறிமுகம் -1

# இந்த நூலைப் படித்துப் பாருங்கள்:!

**நூல்: ஆர். எசு. எசு. ஓர் அபாயம்**
**நூலாசிரியர்; 'விடுதலை' இராசேந்திரன்**

(இக்கால் வெளிவரும் நூல்களைப் பார்த்தால் எதைப் படிப்பது, எதைத் தவிர்ப்பது என்னும் மலைப்புத் தோன்றலாம். எல்லா நூல்களையும் படிக்கக் காலமும் போதாது. 'கற்பவை கற்க' என்றார் திருவள்ளுவரும். எனவே, இப் பகுதியில் அவ்வப்பொழுது சில சிறந்த நூல்களை அறிமுகப் படுத்த எண்ணியுள்ளோம. அன்பர்களும் இப்பகுதிக்கு அவர்கள் படித்த சிறந்த நூல்களைப் பரிந்துரை செய்து எழுதலாம். உரைகள் சுருக்கமாகவும் உள்ளடக்கங்களைத் தெளிவாக எடுத்துக் கூறுவனவாகவும் இருத்தல் வேண்டும். தூய தமிழிலேயே அவை எழுதப் பெற வேண்டும்.)

● ஆர். எசு. எசு. இயக்கத்தினர் நல்ல ஊழியங்களைச் செய்கிறார்கள் என்று காந்தியாரிடம் தெரிவித்தபோது, அவர் சொன்ன விடை: "இட்லரின் நாசிப்படையும் முசோலினியின் பாசிசப்படையும் இதேபோல்தான் ஊழியம் செய்தன என்பதை மறந்துவிட வேண்டாம்" காந்தியாரைச் சரிக்கட்ட முயன்ற கூட்டம், அதிலே தோல்வியைத் தழுவிய போது, அவரது வாழ்க்கையையே தீர்த்துக் கட்டிவிட்டது.

● "நீங்கள் என்னுடைய பெரிய அதிகாரியாக இருக்கலாம். ஆனால் நீங்கள் ஒரு மிலேச்சர். அவர் ஒரு கடைநிலை ஊழியராக இருக்கலாம். ஆனால் நாங்கள் வணங்கக் கூடிய பிராமண குலத்தைச் சார்ந்தவர். அவரைத் தொழ வேண்டியது எனது கடமை என்று பதில் சொன்னார். இது தான் இந்து தருமம"

—ஆர். எசு. எசு. தலைவர் குரு கோல்வாக்கர்.
(ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு)

● "மொழிச் சிக்கலுக்கு ஒரே தீர்வுதான் இருக்கிறது. சமற்கிருதம் ஆட்சிமொழியாகின்ற காலம் வரும்வரை இந்திக்கே நாம் முன்னுரிமை தந்து ஆட்சிமொழியாக்கிக் கொள்ள வேண்டும

—கோல்வாக்கர், 'Bunch of thoughts' என்னும் நூலில்.

● மாநிலப் பிரிவினையும் கூடாது. இந்தியா முழுமையும் ஒரே நடுவ ஆட்சியின் கீழ் இருக்க வேண்டும்"

—ஆர். எசு. எசு. கொள்கை.

● "பிரிட்டானியர் மராத்திய பேய்சுவா பிராமணர்களிடமிருந்து ஆட்சியைப் பற்றினராம். மீண்டும் மராத்திய 'பேய்சுவா' பிராமணர்களிடமே ஆட்சி வரவேண்டுமாம்"

—இராசு நாராயணன்.

இட்லரின் நான்கு டகரக் கொடியின் கீழ், "ஆரிய நாடே உன்னை வணங்குகிறேன்" என்று வணங்கி நிகழ்ச்சிகளைத் தொடங்கும் ஆர் எசு.எசு. இயக்கத்தின் அடியையும் முடியையும் கண்டு உரைக்கும் நூல் இது. பாட்டாளி மக்களின் எழுச்சியைத் தடுக்க வேண்டி, எல்லா 'மத வெறி' நிறுவனங்களுக்கும் பணத்தை அள்ளி வீசும் மேலை முதலாளிய வல்லரசுகளின் பொருளுதவி, இந்துமத வெறியும் பிறப்புயர்வுக் கருத்தாக்கமும கொண்ட பார்ப்பனர்களின் சூழ்ச்சி, ஆரிய மடமை நூல்களின் சிந்தனைத் தொகுப்புகள, மடமையிலிருந்து விடுபடத் தெரியாத பார்ப்பன இளைஞர்களின் அடாவடிச் செயல்கள், கண் கெட்ட சூத்திர மடயர்களின் ஊழியம் — இவற்றால் உருவாகியிருக்கும் இந்த இயக்கம், தமிழ் மொழி, இனம், நாடு ஆகியவற்றின் மாபெரும் பகையாய்ப் பேருருக் கொண்டு எழுந்து நிற்பது. தமிழின ஒற்றுமையைச் சிதைத்துத் தேய்த்து அழிக்கத் தோன்றிய ஆற்றல்களுள் இதுவே பனிமலை போன்றது. பாட்டாளி மக்களின் எழுச்சி, சமநெறிக் குமுகாய மலர்ச்சி போலும் எண்ணங்களையெல்லாம் வேரடி மண்ணோடும் சாய்க்கக் கூடியது.

இத்தகு மாபெரும் தீங்கு ஒன்றினைத் தமிழகத்து இளைஞர்கள் அடிதொட்டு முடிவரை அறிந்தாக வேண்டும். வினை வலியும், தன்வலியும் உணர்வதற்கு முன் மாற்றான் வலியை உணர்வது கடமை. அவ்வகையில் தமிழகத்து இளைஞர்களின் பார்வையைத் தெளிவாக்கும் அருங் கருவூலமாய் இந்நூல் உள்ளது. வடிவத்தைச் செப்பமாக்கினால் இஃது ஒரு 'பண்டாரகர்ப்'பட்ட ஆய்வு நூலாகும். மொழிச் செப்பத்திலும் தூய்மையிலும் குறைபாடிருப்பினும், இச் செய்திப் புதையலைப் படித்துத் தெளிவது இளைஞர்களின் முதற்பணியாகும்.

விலை உரு. 4—00 கிடைக்குமிடம்: திராவிடர்க் கழகம்,
50, ஈ. வெ கி. சம்பத் சாலை,
சென்னை-600 007.

—இரணியன்

---

- ஒவ்வொருவரும் 'தமிழ் நிலம்' படியுங்கள்!
- ஒவ்வொருவரும் வேறு ஒவ்வொருவரைத் 'தமிழ் நிலம்' படிக்கச் செய்யுங்கள்!
- 'தமிழ்நிலம்' படிக்கும் ஒவ்வொருவரும் உடனே உறுப்பினராகுங்கள்!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!


# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 12-6-83 இதழ் எண் : 2 — பகுதி 27.28


## இலங்கைத் தமிழர்கள் அழிவை ஏனென்று கேட்பவர் யாருமில்லையா?

மிக அண்மையில் உள்ள இலங்கைத் தீவிலிருந்து தமிழர்களுக்கு நேரிடும் துன்பத் துயரின் அழுகுரல் நாள்தோறும் கேட்கின்றது. நெருக்கடி நிலையை இலங்கை அரசு அறிவித்துவிட்டு, அஞ்சத்தகுந்த அடக்குமுறைச் சட்டங்களையும் போட்டுக்கொண்டு அங்குள்ள தீவிரக் கொள்கையை மேற்கொண்டு விடுதலை வேள்வியில் தங்களை முற்றுமாக ஈடுபடுத்தி நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டு வரும் ஆயிரக்கணக்கான இளைஞர்களை ஒடுக்கும் நோக்கத்துடன், சிறிலங்கா அரசு மிகவும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது கொடுமையான விளைவுகளைத் தமிழர்களிடையில் ஏற்படுத்தியுள்ளது. நெருக்கடி நிலையின் அடிப்படையில், சிங்களப் படைத்துறையைச் சார்ந்த எவரும், அங்குள்ள எவரையும் சிறைப்படுத்தலாம்; சுட்டுக் கொல்லலாம்; உசாவலின்றிக் கொன்றவரைப் புதைக்கலாம்; அல்லது எரிக்கலாம் என்ற கொடுமையான மேலதிகாரச் சட்டத்தை இலங்கைக் குடியரசுத் தலைவர் செயவர்த்தனே அறிமுகப்படுத்தியுள்ளார். படைத்துறையைச் சேர்ந்த சிங்கள வெறியர்கள் இச் சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, தமிழ் இளைஞர்களைக் கொடுமையாகவும் வேகமாகவும் அழித்து வருகின்ற செய்தி நம்மைக் குலை நடுங்க வைக்கிறது.

கடந்த 1-6-83 அன்று வான் படைத்துறையினர் வவுனியா நகரத்தையே தீயிட்டுக் கொளுத்தியிருக்கின்றனர். ஏறத்தாழ ஏழு கோடி உருபா மதிப்புள்ள தமிழர்களின் உடைமைகள் அழிக்கப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான ஏழைத் தமிழர்கள் வீடு வாயில்களை இழந்து ஏதிலிகளாக்கப்பட்டுள்ளனர். உயர்ந்த பொருள்களை விற்கும் எழுபது கடைகள் முற்றாக எரிக்கப்பட்டுள்ளன. நகரெங்கும் படைத்துறைக் கயவர்களால் சுற்றிவளைத்துப் பிடிக்கப்படும் இளைஞர்கள் உடனே படைவீடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு, ஆடை அகற்றப்பட்டுத் தலைகீழாகக் கட்டி வைத்துத் துன்பப் படுத்தப்படுகின்றனர். அரசு அறிவித்துள்ள கொடுமையான சட்டத்தின் கீழ் பிடிக்கப்படும் எந்த இளைஞரையும் சுட்டுக் கொல்லலாம்; கன்னெய் (பெட்ரோல்) ஊற்றி எரிக்கலாம்; உசாவலின்றி 5 முதல் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை கொடுத்துத் துன்புறுத்தலாம். குருநகர் காவல் பாசறைகளில் இளைஞர்கள் நாள்தோறும் உறுப்புச்சிதைவு (சித்திரவதை) செய்யப்படுகின்றனர். கடந்த 18-5-83-இல் யாழ்ப்பாணத்தில் உள்ள கந்த மடம் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்குத் தீ வைத்து மக்களை மருண்டோடச் செய்து, அவர்கள் சிதறி ஓடுகையில் அடித்தும், சுட்டும் கொண்டிருக்கின்றனர். காந்திய இயக்கத்துக்குச் சொந்தமான ஊர்திகளும், சிறுவர் பள்ளிகளும், ஏதிலியர் குடியிருப்புகளும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. அனுராதபுரம், மினுவாங்கொடை, தீவுலப்பிட்டிய, குருநாகல், நாரம்மலை ஆகிய இடங்களிலுள்ள தமிழர்களின் கடைகள், வீடுகள், சரக்குந்து வண்டிகள் கண் மண் தெரியாமல் அடித்து நொறுக்கப்பட்டுத் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன. வவுனியா, பம்பை, மடுவைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் காணாமல் போயுள்ளனர். வல்வெட்டித் துறையைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் காணாமல் போயுள்ளனர். வல்வெட்டித் துறையைச் சேர்ந்த சபாரத்தினம் பழனிவேல் என்னும் சரக்குந்து ஓட்டுநரான 28 அகவை இளைஞரைப் படைத்துறைச் சுமையுந்தால் மோதி உயிரிழக்கச் செய்திருக்கின்றனர். மொத்தத்தில் கடந்த ஆண்டுகளில் அவ்வப்போது நடந்த அழிவுகளைப் பார்க்கிலும் கடந்த மாத இறுதியிலும் இம்மாதத் தொடக்கத்திலும் நடந்த அழிவுகளும் உயிர்க்கொலைகளும் மிகமிக அதிகம் என்று அங்கிருந்து நமக்குக் கிடைக்கும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. நம் கூட்டணித் தலைவர்கள் அனைவரும் இந்நிலையில் வாய்பேசாத ஊமைகளாக அரசுடன் மறைமுக ஒத்துழைப்புத் தருவதாக நமக்கு வரும் செய்திதான் மிகக் கொடுமையானதும், தன்னழிவு மிக்கதுமாகும் என்று நினைத்துப் பெரிதும் துயர்ப்படுகின்றோம்.

இங்குள்ள நாம் இச் செய்திகளையெல்லாம் கேட்டுக்கொண்டு, ஏதும் செய்வதற்கு ஆற்றலற்றவர்களாகவும் அடிமைகளாகவுமே இருக்கிறோம் என்று எண்ணுகையில், நமக்குற்ற இழிவு நம் உயிரையே கூனச் செய்கிறது; நெஞ்சு பற்றியெரிகிறது; அறிவு நிலைகுத்திப் போகிறது. ஆதன் (ஆன்மா) அல்லலுறுகின்றது! என்னே, தமிழினத்திற்கு வந்த இழிவும் அழிவும்! ஐயகோ, இதைக் கேட்க இங்குள்ள ஆட்சியாளர்களுக்கு வாயில்லையா? நெஞ்சமில்லையா? துணிவில்லையா? இந்தப் பதவி நலன்கள்தாமா இவர்களுக்கு வாழ்க்கை! மானமற்ற தமிழினமே, விரைந்து ஒரு முடிவு செய்! வீணராக நாம் இருந்து மடிவதை விடப் போராடிச் சாவது மேல் என்று துணிவுகொள்! துயரைத் துடைத்துக்கொள்! விழி! எழு! நட! போராடு! அல்லது போரிடு! O

## பிரான்சில் உ.த.மு.க. தொடக்கம்!

**பிரான்சு:** ஏப்: 15: மேற்கு நாடுகளில், முதன் முதலாக நம் **'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்'** கடந்த 15-4-83 ஆம் நாளன்று,பிரான்சு அமைப்பாளர் திரு **அரிமா வளங்கோ** அவர்களைத் தலைவராகக் கொண்டு தொடங்கப் பெற்றுள்ளது என்னும் செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

அங்குள்ள தமிழன்பர்கள் ஒன்றுகூடி, கடந்த 15-4-83-இல் கலந்தாய்ந்து, உ.த.மு.க. வைத் தொடங்கிச் செயற்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளனர். அக்கழகத்திற்குக் கீழ்க்காண்பவர்கள் அமைப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளனர்.

| | |
|---|---|
| தலைவர், அமைப்பாளர்: | **த. அரிமா வளங்கோ** |
| துணைத்தலைவர்: | **இரா. செல்வநாதன்** |
| செயலாளர்: | **எ. செல்வம்(சம்பத்)** |
| துணைச் செயலாளர். | **குழலோன் (வேணு)** |
| பொருளாளர்: | **திரேசா** |

தொடங்கப்பெற்ற உ.த.மு.க. முதன்முதல் தன் செயற்பாடாக, வரும் செப்டம்பர் — அக்டோபரில், பெரியார்க்குப் பெருவிழா கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறது. அப் பெருவிழாவில் கலந்து கொள்ளக்கழக முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**, தி.மு.க. தலைவர் **கலைஞர் மு. கருணாநிதி** தி.க. பொதுச் செயலாளர் **கி. வீரமணி** மற்றும் முற்போக்காளர் சிலரையும் தமிழகத்திலிருந்து அழைப்பதெனத் தீர்மானித்துள்ளது. பிரான்சு உ.த.மு.க வளர்ந்து வளம்பெருக்கி நம் கொள்கைகளை மேற்கு நாடெல்லாம் பரப்பவேண்டுமென நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறோம்.

### பர்மா, இரங்கூனில் உ. த. மு. க. தொடங்கப் பெறுகிறது!

பர்மாவில் உள்ள தமிழர்களை ஒருங்கிணைத்து முன்னேறச் செய்வதன் பொருட்டு பர்மா இரங்கூன், டாம்பின் குயின் என்னும் திருநகரில் ஏற்கனவே 'பர்மா தமிழர் பண்பாட்டுக் கழகம்' 'திருக்குறள் மன்றம்' என்னும் பெயர்களில் இரண்டு கழகங்கள் தோன்றிச் செயற்பட்டு வருகின்றன. அக்கழகங்களை ஒன்றிணைத்து, இக்கால் நம் **'உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தின்** அயலகக் கிளை ஒன்றைத் தொடங்க முன்வந்துள்ளனர்.

பொதுநலத் தொண்டில் மிக்க ஆர்வம் கொண்டவரும், ஏற்கனவே அங்குள்ள 'பர்மா தமிழர் பண்பாட்டுக் கழக'த்தின் துணைத்தலைவராக உள்ளவருமாகிய டாம்பின்குயின் **சா மதியழகனை** உ.த.மு.க.வின் பர்மாகிளைத் தலைவராகவும் அமைப்பாளராகவும் தலைமைக் கழகம் அமர்த்தம் செய்துள்ளது. அவருடன் செயலாளராக இணைந்து செயலாற்றும் பொருட்டு, அங்குள்ள 'திருக்குறள் மன்றத்தின் செயற்குழு உறுப்பினராகச் செயற்பட்டு வந்த இரங்கூன் **ஆறு. பாரிவளவன்** அவர்களை பர்மா கிளைக்கழகச் செயலாளராகத் தலைமைக் கழகம் அமர்த்தியிருக்கிறது. விரைவில் மற்ற பொறுப்பாளர்களும் அமர்த்தப்படவிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். பர்மா உ.த.மு.க. வளர்க, வாழ்க என்று மனமார வாழ்த்துகிறோம். பர்மாக்கிளை உ.த.மு.க. அதன் செயற்பாட்டை விரைவில் அறிவிக்கும் என்று நம்புகிறோம்.

## பாவலரேறு சுற்றுச் செலவு

24-6-83 காலை — குறும்பூர் (திருச்செந்தூர்) பூப்பூநீராட்டு மங்கலவிழா
மாலை — உ.த.மு.க. கொள்கை விளக்கக் கூட்டம்.
25-6-83 மாலை — திண்டுக்கல் முற்போக்கு நண்பர்கள் கழகம்
26-6-83 மாலை திண்டுக்கல் தமிழ்ச்சங்கக் கூட்டம்
27-6-83 மாலை 5 மணி, பழனி உ.த.மு.க. கொடியேற்றம்.
மாலை 6 மணி — பழனி, உ.த.மு.க. கொள்கை விளக்கக் கூட்டம்.
28-6-83 — ஒட்டன் சத்திரப், உ.த.மு.க. கொள்கை விளக்கக் கூட்டம்.

(மூன்றும் பத்தி தொடர்ச்சி)

### சிறிலங்கா அரசக் காடையர்கள் தீயிட்டதனால் ஏற்பட்ட சேதங்கள் ஒரே பார்வையில்:-

| | | | |
|---|---|---|---|
| பொதுவான சிறு ஓலைக் குடிசைகள் | — | — | 64 |
| கல்வீடுகள் | — | — | 30 |
| சில்லறைக் கடைகள் | — | — | 4 |
| அரிசி, மிளகாய் அரைக்கும் ஆலை | — | — | 1. |
| மரக்காலை | — | — | 1. |

(16 தையல் பொறிகள், 18 மின் விசிறிகள், 40 க்கும் மேற்பட்ட நிலைக்கண்ணாடிகள், வீட்டிலிருக்கக்கூடிய உடைகள், ஏனைய பொருள்கள் யாவும் முற்றாக சாம்பலாக்கப்பட்டுள்ளதுடன், உருபா பத்து இலக்கத்திற்கும் மேற்பட்ட விலையுயர்ந்த பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன.)

### சேதமடைந்த ஊர்திகளின் விளக்கம்

சிறு முந்துகள் (MiniVans) 3[1. 29 ஸ்ரீ 4984. 2. 29 ஸ்ரீ 4127. 3. 24 ஸ்ரீ 3326.]

இயங்கிகள் 9[1. ஈ. எண். 4555. 2. ஈ. வை. 8154. 3. சி. வை. 7762. 4. ஈ. எண். 637 (இது கடத்தப்பட்டுள்ளது) 5. ஈ. எல் 9675. 6. 2 ஸ்ரீ 9317. 7. ஈ. எஸ். 3730. 8. 24 3326 9. ஈ.என். 9722.]

மிதிஉந்து (மோட்டார் சைக்கிள்) ஒன்று. மிதி வண்டிகள் 36: மாட்டு வண்டி 1. (நம் செய்தியாளர் கொழும்பு)

## படைத்துறையினரின் தீப்பந்த விளையாட்டால் யாழ்நகர் கந்தர் மடம் சுடுகாடாக்கப் பட்டது

கடந்த அறிவன் 18-5-83 அன்று இலங்கை படைத்துறையினரின் கொடுமையான தீப்பந்த விளையாட்டுக்கும், அஞ்சத்தக்க தாக்குதல்களுக்கும் கந்தர் மடம் மிகுந்த சேதத்துக்குள்ளாக்கப்பட்டது மிகவும் இழிவானதே! அரசடி வீதி, 'பழம்' ரோட், மணல் தரை, ஒழுங்கை ஆகிய இடங்களும், யாழ்ப்பாணம், பழைய சந்தையும் தீயிடப்பட்ட குறிப்பிடக்கூடிய இடங்களாகும் தீப்பந்தவிளையாட்டின் போது குமுகாயத்தின், கீழ் மட்டத்தில் வாழும் 500 க்கும் மேற்பட்ட ஏழை மக்கள் தங்கள் உடைமைகள் அனைத்தையும் இழந்த நிலையில் ஆதரவற்றவர்களாக யாழ் பல்கலைக் கழகத்தையும், அருகிலுள்ள கோயில்களையும் ஏதிலியர் அடைவிடங்களாகக் கொண்டனர். வலுக்கட்டாயமாக வீடுகளை உடைத்து அங்கிருந்த நகைகள், பணம் கைக்கடிகாரங்கள் போன்றவிலையுயர்ந்த பொருட்களைச் சூறையாடிய பின் கையில் கொண்டு வந்த தகரிகளில் உள்ள கன்னெய்யை (பெற்றோலை) வீடுகளுள்ளே ஊற்றி, வீட்டுக்காரர்களிடமே தீப்பெட்டியை வாங்கி தீயிட்டுச் சாம்பலாக்கியுள்ளனர் அத்துடன் வீடுகளிலுள்ள மக்களை அடித்துப் மிகுந்த காயத்துக்குள்ளாக்கினர். இதனால் பல்கலைக்கழக மாணவர்களுட்பட 16 க்கும் மேற்பட்டோர் கொடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். இராசம்மா என்ற பெண்ணும், இயங்கி ஒன்றில் வந்த இருவரும் துமுக்கியால் சுடப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வாழ்விடங்களை இழந்த நிலையில் குடிக்கத் தேநீர் போடவும் ஏனங்களற்றவர்களாகக் காணப்படும் அவ்விரங்கத்தக்க மக்களுக்கு மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் அனைத்துத் தமிழ்க் குமுகாயத்திற்கும் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகும்.

இந்நிலை தொடர்ந்து நடைபெற்றால் தமிழர் குமுகாயம் வாழும் அனைத்து இடங்களுமே சுடுகாடாக்கப்படுவது எதிர்பார்க்கக் கூடியதொன்றாகும். மக்கள் உரிமைகளைப் பற்றி மேடைக்கு மேடை அலம்பித் திரியும் கொடிய அரசின் பாதுகாப்புப் படையினரின் இச்செயலைக் கண்டிக்க யாருமில்லையா? இத்தாக்குதல்களால் ஆதரவற்றுப் போன குடும்பங்களின் மறு வாழ்வுக்கு வழி என்ன? அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு விடை சொல்வது யார்?

இச்சிக்கலுக்கான தீர்வுகள் பற்றிய அனைத்து முடிவுகளையும் தமிழ்க் குமுகமே நன்றாகச் சிந்தித்து உணர்வு முழுமையாகத் தீர்மானிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

(தொடர்ச்சி 2-ஆம் பத்தி)

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

துறையினர் ஏறிக்கொண்டு தெருத் தெருவாக வந்து கொண்டும் போய்க்கொண்டுமாக இருந்து பொது மக்களை அச்சுறுத்தி அல்லற்படுத்துகின்றனர். அவ்வாறு செல்லும் படைத்துறையினர் தங்களுடன் துமுக்கிகளை (துப்பாக்கிகளை) மட்டுமின்றித் தடிகள், மரக்கட்டைகள், இருப்புக் கம்பிகள், கற்கள் முதலியவற்றையும் தாங்கள் ஏறிச்செல்லும் படைத்துறை வண்டிகளில் ஏற்றிச் செல்கின்றார்களாம். அக்கால் தெருக்களில் நடந்தும், மிதிவண்டிகளிலும், உந்துமிதி (மோட்டார் சைக்கில்) களிலும் போவோரைக் கற்களினாலும், இருப்புத்தடிகளினாலும், வண்டிகளில் இருந்தபடியே தாக்கிக்கொண்டே போகின்றனராம். இவர்கள் அவ்வாறு தாக்குவதைக் கண்ட பொதுமக்கள் அலறியடித்தவாறு அங்குமிங்கும் சிதறியோடி அல்லல் படுகின்றனராம். காவல் படையினரும் படைத்துறையினரும் செய்யும் இச் சட்டத்திற்கு மாறானதும் மிகக் கொடுமையானதுமான தாக்குதல்களுக்கு ஆளாகி ஏராளமான தமிழர்களும் தமிழ்ப் பெண்டிர்களும், மண்டைகள் உடைந்தும், கைகால்கள் முறிந்தும் பல்வேறு மருத்துவமனைகளிலும் தனியிடங்களிலும் பண்டுவம் பெற்று வருகின்றனராம்.

பனாகொடை தடுப்புக் காவல்நிலையத்தில் உள்ள இராசசுந்தரத்தையும், டேவிட்டையும் சந்தித்துப் பேசுவதற்கு, அறமன்ற இசைவைப் பெற்றுக்கொண்டு சென்றிருந்த கூட்டணிச் சட்டத்துறைச் செயலரும், காலஞ்சென்ற தலைவா செல்வாவின் மகனும், சிறந்த வழக்கறிஞரும் ஆகிய எசு. சி. சந்திரகாசன் அவர்களைப் படைத்துறைக் காவல் அதிகாரி தாழ்வாகப் பேசி, அவர்களைப் பார்ப்பதற்கு மறுத்துக் கூறித் திருப்பியனுப்பியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் அரசடி சனசக்தி மக்கள்நல நிலையத்தையும், அந் நூலகத்தில் இருந்த பத்தாயிரம் உருபா மதிப்புள்ள நூல்களையும் ஐயாயிரம் உருபா மதிப்புள்ள தட்டுமுட்டுப் பொருள்களையும் படைத்துறைச் சிங்களவர் சிலர் தீ வைத்துக் கொளுத்திச் சாம்பலாக்கியிருக்கின்றனர்.

இவ்வாறு கணக்கற்ற உயிரழிவுகளும், கொடுமைகளும், சொத்துச் சேதங்களும், அரட்டல்களும், அச்சுறுத்தல்களும், வன்கொடுமைகளும், துன்புறுத்தல்களும், சிறைப்படுத்தல்களும், சீரழிவுகளும், கொள்ளையடிப்புகளும், கற்பழிப்புகளுமாகக் கடந்த 1977, 1979, 1981 ஆகிய ஆண்டுகளில் நடந்த கொடுமைகளைப் போலவே கடந்த மாதங்களில், குறிப்பாகச் சென்ற மே மாதத்தில் நடைபெற்றிருந்தும், அவற்றைப் பற்றி எந்த நிலையிலும் எந்த ஒரு சொல்லும் வாய்திறந்து கண்டித்துக் கருத்தைக் கூறாமல், நம் தமிழீழத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் வாய்மூடி ஊமையர்களாய் இருப்பது நமக்கு மிகுந்த வியப்பையும் துயரத்தையும் தருகின்றது. குறிப்பாக நம் பெருமதிப்பிற்குரிய தமிழர் கூட்டணிப் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் அவர்களோ, தலைவர் சிவசிதம்பரம் அவர்களோ இதுவரை இக் கொடுமையான சிங்களப் படைத்துறையினரின் அட்டூழியங்களைக் கண்டித்து அரசுக்கோ, இரங்கலும் ஆறுதலும் தெரிவித்துப் பொதுமக்களுக்கோ ஓர் அறிக்கையோ ஒரு மனந்திறந்த சொல்லோ வெளிப்படுத்தவில்லை என்பது நமக்குத் தற்கொலைக்கு ஒப்பான மனத்துன்பமாகவும் அவமானமாகவும் உள்ளது.

ஆனால் இதற்கு மாறாக, திரு. அமிர்தலிங்கம் அவர்கள், இந்த நிலையில், தீவிர இளைஞர் இயக்கத்தைக் கண்டித்தும், அவர்கள் செயல்களைக் கொடுமையானவை என்று மக்களுக்கு விளக்கப்படுத்தியும், தமிழீழ விடுதலைப் போராட்ட உணர்வுகளை மெலிவுபடுத்தும் வகையில் பேசியும் அறிக்கை கொடுத்தும் வருகிறார். அரசினரின் இக் கொடுமைகளைக் கண்டிக்கும் வகையில் கடந்த மாதம் நடந்த உள்ளூராட்சித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று இளைஞர் இயக்கம் கோரியிருந்த வேண்டுகோளைத் திரு. அமிர்தலிங்கம் மதிக்கவும் செய்யாததுடன், அதை மிகக் கண்டிப்புடன் எதிர்த்துப் பேசவும் அறிக்கை விடவும் செய்தார். இந்த வகையில் திரு. அமிர்தலிங்கம் தமிழர்களுக்கு இரண்டகம் செய்து வருகிறார்.

நூற்றுக் கணக்கான இளைஞர்களும் அறிஞர்களும் சிங்களப் படையினரால் கொடுமைப்படுத்தப்படுகையில் பாராளுமன்றப் பதவி நமக்குத் தேவையா என்பதைக் கூட்டணித் தலைவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தலைவர் அமிர்தலிங்கம் வரலாற்றில் அவப்பெயர் பெறக்கூடாது. அவர் சிந்தித்துத் தம்மைத் தலை நிமிர்த்திக் கொள்ள வேண்டும்.

நம் உ.த.மு.க. அன்பர்களும், ஆங்காங்குள்ள மாவட்ட வட்டக்கிளைகள் சார்பாகத் தமிழீழத் தமிழர் கூட்டணித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களுக்கு அங்குள்ள பொதுமக்கள், இளைஞர்கள் கருத்துடன் ஒத்துப்போக வேண்டும் என்று வேண்டுகோள்களை அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

# அயலகத் தமிழர் இந்தியர் வாழ்வுச் சிக்கல் சர்க்காரியா ஆய்வாணைக் குழு பொறுப்பேற்குமா?

137 வெளிநாடுகளில் வாழும் இந்திய மரபினர் ஒரு கோடி பதினைந்து இலக்கமாகும். அவர்களில் பெரும்பான்மையினர் தமிழர்கள். அவர்களில் 60 விழுக்காடு அந்தந்த நாட்டுக் குடிவாணர்களாகிவிட்டனர். பீசி, கயானா, மொரிசியசு, கென்யா, சமய்க்கா ஆகியன தவிர பிற இந்நாடுகளில் தமிழரே மிகுதி. பல இலக்க இலங்கைத் தமிழர்கள் இதில் அடங்கவில்லை. எனினும் 80% தமிழர் உலகில் பரந்து வாழ்கின்றனர். எனவே, அவர்களின் சிக்கல்கள், தேவைகள் குறித்து ஆராயவும் இந்திய வெளியுறவுக் கொள்கையும் திட்டமும் சட்டமும் திருத்தப்பட வேண்டும். இதனைச் செய்யும் பொறுப்புடன் பரிந்துரைகள் வழங்குவதும் - மாண்புமிகு சர்க்காரியா ஆணைக் குழுவின் பொறுப்பாண்மையாகும்!

எனவே, அரசியல் சட்டங்களில் இத்தகைய அடிப்படைகளைக் கண்டு பொறுப்புடன் திருத்தஞ் செய்யவேண்டிய சூழல் வந்துவிட்டது என வெளிநாட்டுத் தமிழர்கள் கருதுகின்றனர். இந்திய மரபு நிலையைச் சேர்ந்த இந்தியர்களும் தமிழர்களும் ஒரு நூற்றாண்டுக்குமேல் வாழ்கிறார்கள். இந்திய விடுதலைக்குப் பின்னும் இவ்வாறு பலநாடுகளில் குடியேறியவர்களும் உண்டு. அதனால் வெளிநாட்டுத் தூதரகங்கள் மறுவாய்வு செய்யவேண்டிய வேளை வந்துவிட்டது. அதற்கேற்றவாறு அரசியல் திட்டத்தின் இப்பகுதிகள் முகாமை பெறுவதால் திருத்தம் பெறுவது முகாமையானது.

பெரும்பான்மையான நாடுகளில் தமிழர் அல்லது திராவிடர் இனங்கள் வாழும் சூழ்நிலையில் தூதுவர்களாக வட இந்தியர்களையே அமர்த்துவதும், தமிழரல்லாதாரே இப்பணிக்கு வருவதும், இந்தியைப் பரப்புவதும், தமிழ்நூல்கள் — நூலகம் இல்லாததும் பல குறைபாடுகளையும் முரண்பாடுகளையும் உண்டாக்கி விட்டிருக்கின்றன. அவற்றை மாற்றக்கூடிய புதிய அயலக இந்தியர் பாதுகாப்புத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும். துணைத் தூதுவர் தமிழ்மொழி அறிந்தவராகவும் — தமிழராகவும் அமர்த்தம் பெறச் செய்ய உடனடியாக வழிவகை காணவேண்டும் என நீண்ட நாட்களாகக் கோரப்பட்டுவந்திருக்கிறது. அதற்காகத் திட்டவட்டமான கொள்கையோ, பல இன குமுகாயப் பண்பாட்டுத்திட்டமோ இந்தியாவின் வெளியுறவு அமைச்சு மூலம் செயல்படுத்தப் படவில்லை. இந்தியா விடுதலை ஆகி 38 ஆண்டுகளாகியும் இன்னும் ஆரிய — இந்தி வல்லாண்மையர்களே வெளிநாடுகளில் தமிழையும் தமிழரையும் புறக்கணித்து வருகிறார்கள். சில நாடுகளில் தமிழரைக் காட்டுமிராண்டி என்றவாறு ஒதுக்கி வருவதும் உண்டு 1947க்கு முன் தமிழர் மிகுந்து வாழும் நாடுகளில் தமிழறிந்தோரையே பிரிட்டிசு இந்திய அரசு அனுப்பியது. ஆய்வுக் குழுவினரும் அப்படியே! இந்திய அரசியல் திட்டம் உட்பட, மாநில — நடுவ உறவுப் பொறுப்பாண்மைகளில் சர்க்காரியா குழுவுக்கு ஆராயும் அதிகாரம் இருக்க வேண்டும். மாநில அரசுகள், குறிப்பாகத் தமிழக அரசு தமிழகத்திலிருந்து குடியேறிய மக்களின் நலன்களைக் கவனிக்கவும், பொறுப்பேற்று ஒரு பேராளரைத் தூதுவரகத்தில் அமைத்து அவர்களின் சிக்கலை அறிந்து உதவவும் திட்டம் வேண்டும்!

இப்போது தூதரகங்கள் பல சரிவர இயங்கவில்லை. இந்திய உரிமைக் கொள்கை அறிவிப்பு நினைவுக் கூட்டமும், விருந்தும் வைப்பதுடன் சரி. தமிழர்களின் பண்பாட்டுக் கலையொழுக்கத் தேவை, குடியுரிமை, • வாழ்வுரிமை, சிறுபான்மையின மக்களுக்கு மாந்தவுரிமை மறுப்பு ஆகிய பல்வேறு சிக்கல்களால் துன்புற்றுவருகிறார்கள். நாட்டுக்கு நாடு முரண்பட்ட போக்குகளை இந்திய அரசின் வெளியுறவும், தூதரக ஆணையாளர்களும் கடைப்பிடித்து வருகிறார்கள். திரினிடாட், சூரிநாம், பீசி, கயானா, ரியூனியன் போன்ற பல நாடுகளில் தாய்மொழி படிக்க வாய்ப்பற்ற நிலை பல்லாண்டுகளாகக் கொடிகட்டிப் பறக்கிறது. அந்தமான் இந்தியத் தீவுகளிலும் இந்தக் கொடுரம் நிலவுகிறது.

— **அயலகத்தமிழன்.**
மலேசியா.

---

ஈழத்தமிழர்களிடம் அரிதாக ஏற்பட்டுள்ள இவ் விடுதலை உணர்வு கட்டிக் காக்கப்பட வேண்டும். படிப்படியாக அதைத் தளர விடுவோமானால், தமிழினத்திற்கே உலக அரங்கில் மிக இழிவான இடம் ஏற்பட்டுவிடும் என்பதைத் தமிழர்கள் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

— **பெருஞ்சித்திரனார்.**

---

## தமிழரின் பொதுவுணர்வு

அண்மையில் சனதா கட்சித்தலைவர் சந்திரசேகர் தெற்கே கன்னியாகுமரியிலிருந்து வடக்கே நீண்ட ஒரு நடைச்செலவு மேற்கொண்டார். இடையிடையே அவருடன் பலர் வந்து சேர்ந்தும் பிரிந்தும் போய்க் கொண்டிருந்தார்கள். சில சமயங்களில் 200 பேர் அல்லது 300 பேர் அவருடன் நடந்தார்கள். ஒருசில நாட்களில் 1000 பேர்களும் அக்கூட்டத்தில் இருந்தார்கள். ஒருநாள் (மே மாதம் முதல் கிழமையில்) அவருடன் நடந்தவர்களின் எண்ணிக்கை 93. அதில் கன்னடக்காரர் 15 பேர், கேரளக்காரர் 11 பேர், மத்திய பிரதேசத்தினர் 4 பேர், பீகார் மாநிலத்தவர் 4 பேர், உத்திரப் பிரதேசத்தினர் 22 பேர், தில்லிக் காரர் 4 பேர், பஞ்சாபியர் 4 பேர், அரியானா 4 பேர், தமிழர் 23 பேர்.

— ஐ.கே. குச்சரால் ('தினமணி'க் கட்டுரை. சென்னை, 16 5.83.)

## கொள்ளையர்களின் கூடாரம் சுவிட்சர்லாந்து வைப்பகம் (Bank)

பெரும்பாலும் உலகில் உள்ள செல்வர்கள் பிறருக்குத் தெரியாமல் தாங்கள் திரட்டி வைத்துள்ள சொத்துகளைப் போட்டு வைத்துள்ள இடம் சுவிட்சர்லாந்து வைப்பகம் (Bank) என்று சொல்லப்படுகிறது. நம நாட்டிலும் உள்ள பெரிய பெரிய அரசியல் தலைவர்கள், வணிகர்கள், பொதுவாழ்வில் ஈடுபடுவர்கள், திரைப்பட நடிகர்கள், முதலாளிகள் முதலியோர்கள் கூட, தாங்கள் திருட்டுத்தனமாகச் சேமித்த பணங்களை அங்குதான் வைத்துள்ளார்கள் என்றும் கூறுகிறார்கள். அவர்கள் போட்டுள்ள பணங்களுக்கு வட்டி மட்டும் கிடையாது. ஆனால் பணம் மிகவும் காப்பாக இருக்குமாம். ஏனெனில் உலக நாடுகளில் உள்ள எந்த அரசும் இங்குள்ள வைப்பகங்களை மிரட்டி, யார்யார் எவ்வளவு எவ்வளவு பணம் வைத்திருக்கிறார்கள் என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவே முடியாதாம்!

## இமயமலை மாநிலத்தில் தமிழ்க்கல்வி!

மும்மொழித் திட்டத்தின் கீழ் தமிழும், தெலுங்கும் இமயமலை மாநிலத்தில் (இமாச்சலப் பிரதேசத்தில்) உள்ள மாநிலப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்படுமென அம்மாநில முதல்வர் வீரபத்ரசிங் கூறியுள்ளார். இம் மொழிகள் எட்டாம் வகுப்பிலிருந்து 10-ஆம் வகுப்புவரை எல்லா உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளிலும் சொல்லிக்கொடுக்கப்படும் என்றும் இம் மொழிகளின் ஆசிரியர்களை அனுப்பிவைக்கும்படி தமிழ்நாடு, ஆந்திரா அரசுகளைக் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

## தூய தெலுங்கு மொழி வளர்ச்சி!

விசயவாடா, 27-தெலுங்கு தேசக் கட்சியின் 3 நாள் மாநாட்டிறுதியில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் முகாமையானவை மாநிலத்தன்னாட்சி கோருவதும், தூய தெலுங்குமொழி வளர்ச்சியும் பற்றியவை ஆகும். சாதி ஒழிப்புப்பற்றியும், சிறுபான்மையோர் பாதுகாப்புப் பற்றியும் கூடத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தூயதெலுங்கு வெளிப்படின் சமற்கிருத முதுகெலும்பு முறிபடும் மாநிலத் தன்னாட்சிக் கோரிக்கை தெலுங்கு நாட்டிலே கிளம்பியிருக்கின்ற ஒரு புரட்சி வெடி. பொறுத்திருந்து பார்ப்போம். தமிழா, நீ பொறுத்துக் கொண்டேயிரு!

## கொள்ளை!

ஆட்சியாளர் மீது ஆளுங்கட்சிச் சம உறுப்பினரும் திருச்சி மாவட்ட அ.தி.மு. கழகச் செயலருமான திரு. கே. சவுந்திரராசன் கூறியுள்ள குற்றச்சாட்டு இது. அவர் தான்சி (Tansi) சார்பிற் கொண்டாடப்பட்ட மே நாள் விழாவில் கலந்துகொண்டு இவ்வாறு கூறியுள்ளார். கை நீரிறைப்பான்கள் உரு. 50/- அடக்கத்தில் உண்டாக்கப்படுகின்றன. ஆனால், இவற்றையே தனியாரிடமிருந்து உரு. 200/ கொடுத்து வாங்கப்படுகின்றன. இந்த வகையில் 3,00,000 நீரிறைப்பான்கள் வாங்கப்பப்பட்டுள்ளனவென்றும், மூன்று கோடி உருபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளன வென்றும் தெரிகின்றது. ஆனால், இவ்வகை ஊதியந் தரும் வேலைகளுக்கு 'தான்சி'க்கு ஆணைகள் வழங்கப்படுகின்றனவா என்றால், இல்லை. அதன் தொழிலாளர்கள் இரக்கப்படும்படியானவர்களே!'

நன்றி, தினகரன், — 3-5-83
நம் செய்தியாளர், நன்னன்

# தமிழ் நிலம் அழியாத வரலாறு படைக்கட்டும் !

தோ. இலக்குவன், மஞ்சூர், நீலமலை.

"தமிழ் நில"த்தின் தொடக்கம் பிற குறுகிய அமைப்புகளைப் போல உருவானது; ஓரிருவரால் வளர்க்கப் பட்டது; உருத் தெரியாமல் அழிந்து போனது" என்றில்லாமல் காலத்தால் அழிக்கவியலாத ஒரு தூய்மையான வரலாறு படைக்கவேண்டும். இனிவரும் தலைமுறையினர் 'தமிழ்நிலம் ஊன்றிய வித்துகளின் பயனை முழுமையாகத் துய்க்க வேண்டும். இன்றில்லையென்றாலும் இனி வரும் தமிழ்க்குமுகாயமாவது 'தமிழ்நிலத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் அமைப்பு ஒன்றினால்தான் ஆளப் படவேண்டும் தமிழ்நாட்டில் அந்நிலை உருவாக வேண்டுமெனில் கடந்து போன கால—கட்டங்கள் கனவு நிலையாக மாறவேண்டும் புதிய வலுவுள்ள நடுகற்கள் இன்று நடப் பட்டாக வேண்டும். இன்றைய தமிழ்க் குமுகாயத்தை மெல்ல அழித்து வரும் திரைப்படங்கள் என்னும் கொடிய கட்டுவிரியன்களும், குடும்ப இதழ்கள் என்ற பெயரில் தமிழ்க்குலத்தைக் குலைக்கத் தோன்றியுள்ள கண்ணாடி விரியன்களும் இனிவரும் குமுகாயத்தையாவது தாக்கா வண்ணம் மாபெரும் இயக்கமொன்று தொடங்கப்படுதல் இன்றியமையாத பணியாக உள்ளது. போர்க்குரல் இக்கணமே ஒலிக்க வேண்டும்.

கல்வி வாணிபப் பொருளாய்விட வாழ்க்கைக் கடலில் சிக்கி வழிதெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் இன்றைய சிறார்களின் வாழ்வு மலரத் தமிழ்நிலம், சில மாதிரிக் கல்வி நிலையங்களை உருவாக்கி ஏற்புடைய கல்வி கற்க வழிசெய்ய வேண்டும். தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள் கூறியவண்ணம் உழவுத் தொழில் ஒரு செயல்முறைப் பாடமாக அமைய, பண்பையும் அன்பையும் வளர்க்கும் மாந்த மெய்ம்மத்தை விளக்கும் நிறைகல்வி பயிற்றுவிக்கக்கூடிய கல்வி நிலைங்கள் தொடங்கப்படுதல் வேண்டும். கல்லூரி நிலையில் இன்று தனித்தமிழ் பயிற்றுவிக்கும் தமிழ்கல்லூரிகள் யாவும் சமயத் தலைவர்களின் கைகளில் தவழ்கின்றன. அங்குத் தனித்தமிழ் பயிலும் மாணவர்களுக்குத் தமிழுணர்ச்சி ஊட்டப்படுவதற்குப் பகரமாகச் சமயவுணர்ச்சியே ஊட்டப்படுகிறது. இந்நிலை மாறி வருங்காலத்தில் தமிழைப் பயிற்றுவிப்போர் தமிழுணர்ச்சி நிறைந்தவர்களாகவும், தமிழுணர்ச்சி ஊட்டுபவர்களாகவும் இருக்குமாறு மாதிரித் தமிழ்க் கல்லூரிகளையும், கலைக் கல்லூரிகளையும் நிறுவுதல் வேண்டும்.

'தமிழ் நில'த்தின் உயரிய கொள்கைகளை நந்தமிழ் மொழியிலேயே சொல்லிக் கொண்டிருந்தால் நடுவணரசும், பிற மாநிலத்தாரும் அறிய வாய்ப்பின்றிப் போகிறது. நம் கொள்கைகள் உரக்க ஒலிக்க வேண்டும். அதற்காகத் தமிழ்ப்பற்றும் தமிழறிவும் நிறைந்த சிலரைத் தேர்ந்தெடுத்துப் பிறமொழிகள் செவ்வையாகப் பயின்று வரச் செய்து அவ்வம்மொழிகளில் நூல்கள்வழி நம கொள்கைகள் ஒலிக்கச் செய்தல் வேண்டும். குறிப்பாக இந்தியாவின் மொழிக் கொள்கையின் இழிநிலையை இந்தி மொழியிலேயே விளக்கித் தென் மாநிலங்களின் இந்தி மொழியெதிர்ப்பை உணர்த்த வேண்டும். தமிழ் நிலத்தின் கொள்கைகளை உலகத்தவர் எவரும் புரிந்துகொள்கின்ற வகையில் செயலாற்ற வேண்டும்.

இதுபோன்ற பல கடமைகள் நம்முன் இருப்பினும் தமிழ் நிலம் ஆல்போல் தழைத்து உறுதியாக நின்று வரலாறு படைக்க முயற்சிகள் பலவும் செய்தாக வேண்டும். தமிழ் இன மானமுள்ள, மொழிப்பற்றுள்ள அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றத் 'தமிழ் நிலம்' வழி வகுக்கட்டும்.

வாழ்க தமிழ் மொழி ; வாழ்க தமிழ் நிலம்.

# நாம் இந்துக்கள் அல்லர்

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சுப்புலாபுரம் எனும் ஊரில் ஒரு கோவில் நிகழ்ச்சியில் உரையாற்றிய தோழர். இளமுருகனார் "இந்து முன்னணி" "இந்து விசுவபரிசித்" என்று தனக்கு முன் பேசி, சமயவெறியினைத் தூண்டியவர்களுக்கு நறுக்குத் தெரித்தாற் போல் கீழ்க்காணும் வினாக்களையெழுப்பினார் இந்து என ஒரு மதம் உண்டா? அம்மதத்தைத் தோற்றுவித்தவர் யார்? இந்து சமயம் சீராக வளர்க்கப்பட்டது என்பதற்குரிய அடிப்படை உண்டா? இந்து சமயப் பெரியார்கள் யார்? இந்து என்பதன் பொருள் என்ன? என்பன அவை.

மேலும் அவர் இந்து என்ற சொல்லுக்கு நிலவு, கரடி என்ற பொருள் தான் அகர முதலியில் காணப்படுகிறது. இந்தப் பொருட்களின் பெயரில் ஒரு மதம் எங்கு, ஏன், எப்படித் தோன்றியது? எனக் கேள்விக் கணைகளைத் தொடுத்தார். இந்தியாவில் வாழ்பவர்கள் இந்தியர்கள்; அவர்கள் தழுவிய சமயம் இந்துசமயம் எனத் தற்பொழுது பேசப்படுகின்றதே தவிர தமிழக வரலாற்றில் இம்மதம் காணப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே நாமெல்லாரும் "இந்துக்கள்" அல்லர் எனக்கூறி முடித்தார். கூட்டத்திலிருந்த அனைவரும் இவ்வெதிர்பாராத தாக்குதலில் திடுக்கிட்டாரெனினும், கேள்வியில் பொதிந்த உண்மையினை ஒப்புக் கொண்டு அவர் கூற்றைப் பாராட்டினர்.

—குமரன், செய்தியாளர்.

## தமிழகக் கோயில்களின் செல்வத்திலிருந்து "இந்து மதப் பல்கலைக் கழகம்" அமைக்கக் கோருவதா ?

தமிழரில் பலர் அறியாமையாலும், மடமையினாலும், அடிமைத் தனத்தினாலும், தம்மை "இந்து" மதத்தில் பிறந்தவர்களென ஏமாறுவதை நல்லமுறையில் பயன்படுத்தி 'வேத இந்து" மதத்தை விறுடன் வளர்க்கத் தொடங்கியுள்ளனர், தமிழினப் பகைவர்கள். திருச்செந்தூர் அருள்மிகு முருகன் கோவிலின் மிகுதிச் செல்வத்தைக் கொண்டு, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மெய்ம்மத் துறையில் "வேத இந்து மதம்" குறித்துப் பிரிவு ஏற்படுத்தத் தமிழக அரசு முடிவு செய்து அதற்கென ஓர் இலக்க உருபாவினைக் கோவில் செல்வத்திலிருந்து மாற்றியுள்ளதாகத் தெரிய வருகிறது.

கோயில் பொருளை ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்தாமல், தமிழர்களின் அறிவினை மழுங்கச் செய்யவும், பிறப்பால் ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் அழிவுப் பணிக்கே செலவிடுவதும் முறைதானா என நாம் கவலுறுங்கால், தமிழினப் பகைவர்கள் இன்னும் எட்டிப்படித்தாண்டி 'இந்து மதப் பல்கலைக் கழகம்" தமிழகத்தில் அமைக்கக் கோருகின்றனர் இந்து மக்கள் அருளாட்சிக் கழகத்தின் குமரி மாவட்டச் செயலர், தமிழக முதலமைச்சருக்கும், அறநிலைத் துறை அமைச்சருக்கும் கீழ்க் காணுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"இந்து சமய 'ஆலய'ங்களின் வருமானத்தினால் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் ஆராய்வு(?) நிறுவனம் ஏற்படுத்த அரசு தீர்மானித்து இருப்பதனை மாற்றி இந்து சமய 'வேத'ங்களையும், உபநிடதங்களையும், மற்ற மத 'போதனை'களையும் ஆராய்வதோடு சமயத்தின 'ரீதி'யில் வளர்ச்சி (!) அடைய இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் "இந்து மதப் பல்கலைக் கழகம்' அமைத்து இந்து(?) மக்கள் பயன்பட (!) நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்" எனத் தமிழக அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

நமதருமைத் தமிழ் மக்களைப பல கூறுகளாப் பிரித்தும், பிறப்பால் ஏற்றத் தாழ்வினைக் கற்பித்தும், அறியாமையெனும், இருள் வளர மூட நம்பிக்கையினை வளர்த்தும், இறைக் கொள்கைக்கு மாறான அருவருப்பூட்டும் பாலியல் கட்டுக்கதைகளைக் கற்பித்தும் கோபுரங்களில் அம்மணக் களியாட்டங்களைக் காட்டியும் மக்களை அறிவியலுக்குப் புறம்பான காட்டு விலங்காண்டிகளாக மாற்ற முயலுகின்ற ஆரிய மதமான "வைதீக" மதத்தை, "இந்து மதம்" எனப் பெயரில் வளர்த்து, உலக முதன் மொழியாம் தமிழ்மொழியினை அழிக்க, சிவனிய, மாலிய கோயில்களின் பணத்தினைப் பயன்படுத்த வேண்டாமெனத் தமிழக அரசினை அன்புடன் வேண்டுகின்றோம்.

—த. கரிகாலன்,
தலைவர், உ. த. மு. க.
திருநெல்வேலி (வடக்கு)
மாவட்டக் கிளை.

# வேப்பிலைப்பட்டியில் வேறு நல்லவர்களே இல்லையா ?

சேலம் மாவட்டத்திலுள்ள வாழைப்பாடியை அடுத்த வேப்பிலைப்பட்டி என்கிற ஊர்க்காரர் திரு. செல்லமுத்து என்பவர். இவரின் அகவை 55. இவர் காட்டுக் கொட்டகையில் குடியிருந்து வந்தார். இவருக்கு மேட்டுக் காட்டில் 2½ குறுக்கம் (ஏக்கர்) நிலமுண்டு. அதில் ஏழிலை (மர) வள்ளிக் கிழங்கு பயிரிட்டார். பயிர்த் தொழிலுக்கு உதவியாகத் தாழ்த்தப் பட்ட மக்கட் பிரிவிலிருந்து 9 ஆட்களை வேலைக்கு வைத்துக் கொண்டார்.

வேப்பிலைப்பட்டியின் ஊர்க்கட்டுப்பாடு, 'தாழ்த்தப் பட்ட மக்களை வேலைக்குச் சேர்க்கக் கூடாது' என்பது! இக் கட்டுப்பாட்டை மீறித்தான் திரு. செல்லமுத்து தாழ்த்தப்பட்டோரை வேலைக்கு வைத்திருந்தார். பொறுக்குமா ஊர்? ஊர்க்கூட்டத்தை (பஞ்சாயத்தை)க் கூட்டினார்கள். ஆனால், திரு. செல்லமுத்து அதைப் பொருட்படுத்தவில்லை பல கூட்டங்கட்குப் பிறகு ஒரு கூட்டத்திற்குச் சென்றார். அதில் அவர் செய்த பெரிய குற்றத்துக்குத தண்டம் போடப்பட்டது! தண்டத்தைக் கட்டாமல் ஊரை மீறினார்.

வேப்பிலைப்பட்டி திரு. செல்லமுத்தை விலக்கி வைத்தது வண்ணார் வெளுக்கக் கூடாது; நாவிதர் சிரைக்கக் கூடாது; பாற்காரர் பால் தரக்கூடாது; கடைக்காரர்களும் பொருட்கள் தரக்கூடாது என்னும கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தியது. இவ்வளவு கொடுமைகட்கிடையிலும் அவர் தம் பயிர்த் தொழிலை மிகச் செம்மையாகச் செய்து வந்துள்ளார். தமக்குற்ற கொடுமைகளைக் காவல்துறையிலும் முறையீடு செய்துளளார்.

இவ்வாறான நிலைமை நீடிக்கும் பொழுது தமது கிணறு ஆழப்படுத்தப்படும் வேலை நடந்து வந்தது. அதைப் பார்க்கச் சென்றார். ஐயகோ! அந்த நல்ல உள்ளம் படைத்த மாந்தர் வெடி குண்டு வீசப்பட்டுக் கொல்லப்பட்டார்.

இது 20-5-1983 ஆம் பக்கல் 'தினத்தந்தி' என்னும் நாளிதழில் வந்துள்ள செய்தி இந்த நாடு அயலவன் வெள்ளையனை வெருட்டி விட்டுத் தன்னுரிமை பெற்று முப்பத்தாறாண்டுகளாகி விட்டன. சாதி உணர்ச்சிகளைக் கொல்வோம் என்றவர் குலமக்களையே கொன்று குவிக்கின்றனர். அந்த வேப்பிலைப்பட்டியில் மாந்தர்கள் இல்லையா? என்ன இது காட்டு விலங்காட்டித்தனம்? அந்த ஊரிலே தாழ்த்தப்பட்டோருக்காகப் பாடுபட்டதாகத் தம்பட்டம் அடிக்கிறார்களே. காந்தியடிகள் (!) அவர் பெயரைச் சொல்லிக் கொண்டு 'கட்சிக்காரன்' எனக் கைந் நூலாடைக்குள் ஒளிந்திருக்கும் யாருமே இல்லையா? ஊரைக் கவனியாது உலகப் பொதுமை பேசும் பொதுவுடைமைக் கட்சிக்காரர் யாருமில்லையா, அங்கு? பெரியாரியம், அண்ணாயியம் பேசும் தன்மானக் கட்சிக்காரர்கள், திராவிட மரபுக் கட்சிக்காரர்கள் யாருமே அங்கில்லையா? ஏன் அங்கிருப்பவர் மாந்தர்களே இல்லையா? பின் யார் அவர்?

கி. இளஞ்சேரல்முதுபாண்டியன்

# உழவரின் கண்கள் குருடாக்கப்பட்டன !

சிற்றூர்ப்புற நில முதலாளிகளின் நடவடிக்கைகளில் தலையிட்டதாகக் கூறிக், கடந்த 18 மாதங்களில் 31 பேர்களின் கண்கள் குருடாக்கப்பட்டுள்ளன. இந்தக் கொடுமை வங்கதேசத்தில் உள்ள நவகாளி மாவட்டத்தில் நடந்ததாக 'விசித்ரா' என்ற டாக்கா கிழமையிதழ் எழுதியுள்ளது. அவ்விதழில் கண் பார்வை பறிக்கப்பட்ட இருவரின் புகைப் படங்களும் வெளிவந்துள்ளன. அத்துடன் கண்கள் பறிக்கப்பட்ட விளக்கங்களும் வெளியிடப்பட்டுள்ளன. சுண்ணாம்பும் சோடா காரமும் கலந்த கரைசலைக் கண்களில் விட்டுப் பார்வையைப் பறிப்பதுடன் கண் விழிகளையும் தோண்டி எடுத்து அரத்தக் களறி ஆக்குவதும் உண்டு. இந்தக் கொடுமைக்கு உள்ளானவர்கள் பெரும்பாலும் நிலமற்ற இளம் உழவர்கள்.

# சோழர் தலைநகரத்தில் கழுகுகள்

கங்கை கொண்ட சோழபுரம் இடைக்காலத் தமிழகத்தின் தலைநகரம். கி.பி. 1012 இல் முதலாம் இராசேந்திர சோழன் காலம் தொடங்கி கி. பி. 1279 இல் மூன்றும் இராசேந்திரன் காலம் வரை பதினன்கு மன்னர்களால் இருநூற்றறம்பது ஆண்டுகள் பெருமையுடன் வாழ்ந்த நகரம். பழந்தமிழகத்தின் பெருமை ஏட்டளவில் பேசப்படுவது போலவே இன்றைய கங்கைகொண்ட சோழபுரத்தின் பெருமையும அமைந்துள்ளது. பழம் பெருமையும் அமைந்துள்ளது. பழம் பெருமைக்குச் சான்ருக நிற்பவை புழுதி படிந்த கங்கை கொண்ட சோழபுரக் கோயிலும் பொன்னேரி என்னும பெயரால் அழைக்கப்படும் சோழகங்கம் என்னும் பெரிய ஏரியுமேயாகும்.

இரண்டு ஆண்டுகட்கு முன்னர் தொல் பொருள் ஆய்வுத் துறையினர் சோழ மாமன்னர்கள் வாழ்ந்ததாக இங்குள்ள மக்களால் வழிவழியாக அழைக்கப்பட்டு வந்த மாளிகைமேடு என்னும் புன்செய் வெளிப பகுதியல அகழ்வாய்வு செய்தனர். மாளிகையின சுவர்களும் ஓடுகளும கிடைத்தன. இதற்கு முன்பே இப்பகுதி மக்கள் யாவரும் புதிதாக வீடு கட்டுவதற்கு கோடை காலத்தில் மாளிகை மேட்டுப் பகுதியில் சுவர் பறித்து அவற்றில் கிடைக்கும கற்களைக் கொண்டே கட்டி முடிகது விடுவர். தொல் பொருள் ஆய்வுத் துறையினர் புதிதாக அகழ்வாய்வில் எதையும் கண்டறியவில்லை.

அகழ்வாய்வு தொடங்கிய அந்த ஆண்டில இராசேந்திர சோழன் பிறந்த நாளைத் தமிழ நாடு அரசு அரசுவிழாவாக மாளிகை மேட்டுப் பகுதியிலேயே கொண்டாடியது.

சென்ருண்டு திசம்பர் 29—30 ஆகிய இரண்டு நாட்களும மூன்று இலக்கம் உருபாவுக்கு மேல் பெருஞ் செலவில் அமைச்சர்கள நெடுஞ்செழியன், கோமதி சீனிவாசன், இராசேந்திரன் ஆகியோர் புடைசூழ ம. பொ. சி., குன்றக்குடி அடிகளார் உட்பட கலந்து கொண்டு சோழ மன்னனின பிறந்த நாள் விழாவை நடத்தியுள்ளனர்.

அமைச்சர்கள் வருகை தருவது என்றுல் எப்படி வரவேற்புப் பதாகைகளும் சுவரொட்டிகளும் தோரணங்களும் மினவிளக்கு அணிப்படுத்தல்களும் மக்கள் பணத்தால் வாரி இறைக்கப்படுமோ அப்படியே இங்கும் முறை பிறழாமல் நடந்துள்ளது.

கங்கை கொண்ட சோழபுரமும் அதன் சுற்றுப்புறவூர்களும் ஏழ்மையிலும் அறியாமையிலும மூழ்கிய மக்களைத் திணித்துக் கொண்டுள்ள பகுதியாகும்.

இராசராச சோழ மாமன்னனுல் தலைநகராக ஆளப்பட்டு வந்த தஞ்சை மாநகரை அவன் மகன் முதலாம் இராசேந்திர சோழன் யாது காரணத்தாலோ கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றினன். இப்பகுதியின் வறண்ட நிலையை அறிந்த மாமன்னன் தாம புதிதாக அமைத்த தலைநகருக்கு மேற்கில் 1½ கல் தொலைவில் சோழகங்கம் என்னும் ஏரியை வெட்டினன். பதினைந்து கல் தெற்கு வடக்கிலும மூன்று கல் கிழக்கு மேற்கிலும் பரப்பளவு உடையதாய்த் திகழ்ந்த அக்காலச் சோழ கங்கம் இன்று தெற்கு வடக்கில் மூன்று கறகளாகவும் கிழக்கு மேற்கில் ஒரு கல்லாகவும தேய்க்கப்பட்டு விட்டது.

சோழ மாமன்னனுல் நாட்டு வளத்திற்கென்று உருவாக்கப்பட்ட அச்சோழகங்கம தமிழக வரலாற்றில நிகழ்ந்த அயலவர் ஆட்சிகளால தூர்க்கப்பட்டுப் பாழ் வெளிகளாகவே நெடுங்காலம கிடந்தது. கி.பி. 1646 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் செப்பப்படுத்தப்பட்ட சோழகங்கம என்னும் பொன்னேரி 1950 இலிருந்து பத்தாயிரம குறுக்கம(ஏக்கர்) அளவுக்கு நெல்விளையும் பயனைச் செய்து வந்தது. ஆங்கிலேயருக்குப் பிறகு ஆட்சி செய்த பேராயம (காங்கிரசு) தி. மு. க., அ. தி. மு. க. ஆட்சியிலும் அவ்வேரியின் நலனுக்கென்று நடந்தன வெல்லாம ஆண்டாண்டு தோறும் ஒதுக்கப்படும் இலக்கக் கணக்கான உருபாக்களையும அவவவ் வாட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களும அவர்களின் உறவினர்களும் ஏரியை ஆழப்படுத்தப் போவதாக அறிவித்து விட்டுப, பங்கு போட்டுக் கொண்டதே இன்று வரை நடக்கும் வரலாருகும. இவ்வுண்மையை ஆமையுடல் போல் கிடக்கும் இவ்வேரியின் இன்றைய நிலையை நேரில் கண்டு தெளியலாம்

கார்காலத் தொடக்கத்தில் பெய்யும் மழையால் ஒவ்வோர் ஆண்டிலும் நீர் பிடிக்கும் பொன்னேரியில் இவ்வாண்டு பெய்த மழைக் குறைவால் காலேரி அளவிற்கே நீர் நிறைந்தது. தொடர்ந்து மழை பெய்யும் என்னும் நம்பிக்கையில் பொலவேளில் நம்பிய உழவர்கள் அனைவரும் வழக்கம போல் இவ்வாண்டும் நடவு நட்டுவிட்டார்கள். இப்பொழுதோ மழை பொய்த்த காரணத்தால் பயிர்கள் நீரின்றிக் காய்கின்றன. 1950 ஆம் ஆண்டிலிருந்தே இவ்வாண்டு போல் வாடிய பயிர்களைக் கண்டதில்லை என்று உழவர்கள் கண்ணீர் வடிக்கின்றனர். பொன்னேரி ஏமாற்ருத ஆண்டுகளில் விளையும் நெல் விளைவைக் கொண்டே அரை வயிற்றைக் கழுவும் இப்பகுதி மக்கள் இவ்வாண்டு படி நெல்லுக்கும் வகையின்றி ஏற்பட்ட பேர்கும் கடும் பஞ்சத்தால் என்னவோ என்று நெஞ்சு பதைபதைக்க ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கலங்கிச் செயவதறியாது தவிக்கிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் பொன்னேரியில் நீர் பிடித்ததிலிருந்து நீர் வடியும் காலம் வரை இப்பகுதி முழுவதும் நீர்வாழ் பறவைகள் பறக்கின்றன. பறக்கின்ற காட்சியையும் பொன்னேரியில் நீந்திக்கொண்டு வட்டமிடும் காட்சியையும் இன்று எண்ணிப் பார்த்தால் ஆயிரம் இடிகள் சேர்ந்து தலையில் விழுவது போல் உள்ளதென்கின்றனர் இப்பகுதி மக்கள். இன்றோ இப்பகுதியின் வயல் வெளிகளிலும் நீரிலலா பொன்னேரியிலும் கழுகுகள் எங்கெங்கிருந்தோ வந்து திரிந்து வருகின்றன.

பல இலக்கக்கணக்கான உருபாக்களில் வாண வேடிக்கைகளும் பட்டிமன்றங்களும் கருத்தரங்கங்களும் நாட்டியக் கலைநிகழச்சிகளுமாக இன்றைய அ.தி.மு.க அரசு இராசேந்திர சோழனின் பிறந்த நாளை இவ்வாண்டு கொண்டாடுவது கண்டு தான் இப்பகுதி மக்கள் தங்கள் வயல்வெளிகள் பாலைநிலம் போல் கிடப்பதைக் கண்டு மனம் கொதிப்பதை விட அதிகமாக மனக் கொதிப்படைகின்றனர்.

ஆயிரக்கணக்கான உழவர்கள் பொன்னேரியை ஆழப்படுத்த வேண்டும் என்றும் இரண்டு மூன்று ஆழ்குழாயக் கிணறு தோண்ட வேண்டும என்றும் கோரிக்கை வைத்து மாண்புமிதக்களுக்குக் கறுப்புக்கொடி காட்டுவதற்கு ஏற்பாடு செய்த வேளையில் அதிகாரம் படைத்த ஆட்சியாளர்கள் யார் யார் வாயை அடைத்தால் இப்போராட்டம் உருவெடுக்காது என்பதறிந்து அவ்வவர்கட்கும் ஏற்ப விழாக்குழுவில் இடமளித்துவிட்டனர். ஆனுலும் செய்ய வேண்டிய பணிக்காக மக்கள் பணத்தைச் செலவழிக்காமல் மாமன்னனின் பிறந்த நாள் விழா என்னும் பெயரில் அமைச்சர்களும அதிகாரிகளும் சில உள்ளூர்க்காரர்களும பங்கு போட்டுக் கொள்வதை வயிற்றெரிச்சலுடன் மக்கள் பேசிக் கொண்டு தான் உள்ளனர்.

வறண்டு கிடக்கும் வயல் வெளிகட்கு நடுவில் அமைந்த புழுதி நிறைந்த பாதைகளிலெல்லாம் மாண்புமிகுகளுக்கு வரவேற்புத் தோரணங்கள் மாவிலைகளாலும் மின்சார விளக்குகளாலும அமைக்கப்பட்டுள்ளன.

சோழ மாமன்னனின் தலைநகரத்தில் பிணந்தின்னும் கழுகுகள் மட்டும் இன்று பறக்கவில்லை பணந்தின்னும் அதிகார அமைச்சர்களும் அதிகாரிகளும் சில உள்ளூர்க் கயவர்களும ஆகிய கழுகுகளும தாம் பறக்கின்றன என்று அப்பகுதி மக்கள் அல்லல்பட்டு ஆற்ருது அழுது கண்ணீர் வடிக்கின்றனர். ஏ! தாழ்ந்த தமிழகமே என்னும ஒரு குரல எங்கிருந்தோ கேட்கிறது!

''ஊருக்கொன்ருய்ச்
சிலைஉறை ஊன்றுதலால்
விழாக்களுல
உலகங் காணத்
தேருக்குள் அமர்ந்த
வண்ணத் தோரணங்கள்
தலையிடிக்கும
தெருவலத்தால்
ஆருக்கிங் கென்னபயன்
எத்தனை யாண்
டவைநிற்கும்
ஆக்கங்காணும்
வேருக்குள் ளன்றுநீர்
விடல் வேண்டும
அடிப்படையை
விளைத்தல் வேண்டும்''

என்னும் பாவலரேறுவின் ஏக்கப் பாடல் தமிழக அமைச்சர்களால் ஒரு பெரிய புரட்சியை இந்நாட்டில் தோற்றுவிக்கும் என்பதைத் தான் கங்கை கொண்ட சோழபுரமும் காட்டி நிற்கின்றது.

—அழல்நெஞ்சன்

(1-ஆம் பக்கம் தொடர்ச்சி)

லோகநாதன், செல்வராசு ஆகிய இளைஞர்களையும் படைத்துறைக் கொட்டடிக்குக் கொண்டு சென்று கடுமையாக அடித்துத் துன்புறுத்தியிருக்கின்றனா.

கடந்த 18-5-83 இரவு யாழ்ப்பாணத்தில், குடியிருப்புப் பகுதிக்குள் படைத்துறையினர் புகுந்து, அங்குள்ள ஏழைத் தமிழர்களின் 150 குடிசைகள், 30 கலவீடுகள், ஏறத்தாழ 50க்கு மேற்பட்ட வண்டிகள், உந்துகள், மிதிவண்டிகள் ஆகியவற்றைத் தீ வைத்துக் கொளுத்தியிருக்கின்றனர். ஏதுமறியா ஏழைத் தமிழ் மக்களும் படைவீரர்களால் கடுமையாகவும கொடுமையாகவும் இரக்கமின்றித் தாக்கப்பட்டிருக்கின்றனர். அங்குள்ள காய்கறிகள் அங்காடி தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது எதிர்பாராமல் நள்ளிரவில் நடந்த இந்தத் தாக்குதல்களால், வெளியில் இருந்த நூற்றுக்கணக்கான பெண்கள், தாய்மார்கள் அனைவரும் அலறியடித்துக் கொண்டு அஞ்சி ஓடி வீடுகளுக்குள் புகுந்து கதவுகளைத் தாழிட்டுக் கொண்டு பதுங்கியிருந்தனர். வீடுகளுக்குள் ஓடி ஒளிந்திருந்த அவர்களைக் காவல் படையினரான சிங்களக் கயவர்கள், கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று தாக்கியதுடனும் அவமானப்படுத்தியதுடனும் நில்லாது, அப்பெண்கள் அணிந்திருந்த கழுத்துத் தொடரிகள், தாலிகள், தாலிக்கொடிகள் முதலியவற்றையும் அறுத்துக் கொண்டு போயிருக்கின்றனர். அவ்வாறு பல இலக்கக்கணக்கான சொத்துகளை அந்த ஏழைமக்கள் இழந்திருக்கிருர்கள். மொத்தத்தில் அன்றைக்கு அந்தப் பகுதியில் மட்டும் நேர்ந்திருக்கும் சொத்து அழிவுகளின் மதிப்பு ஏறத்தாழ 2 கோடி உருபாவுக்கு இருக்கும் என்று கணக்கிடப்படுகிறது.

19-5-83 அதிகாலையில் யாழ் நகரத்தல் உள்ள கல்வியங்காட்டுப்பகுதியில் உள்ள குடியிருப்பில் படைத்துறையினர் திடுமென வந்திறங்கி, அங்குள்ள 18 அகவைக்கும் 40 அகவைக்கும் இடைப்பட்ட அனைத்து ஆடவர்களையும் கண்களை மூடிக் கொண்டு தாக்கியுள்ளனர். பலரை ஆய்வுக்காகவும் உசாவலுக்காகவும் படைப்பாடிகளுக்கு அழைத்துச் சென்று கொடுமை செய்து அச்சுறுத்தியுள்ளனர்.

சுன்னுகம் காவல் நிலையத்தைச் சேர்ந்த தமிழ்க் காவல்துறை அதிகாரி ஒருவரையும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்ற காவல்துறையினரில் தமிழர்களாக இருந்த இருவரை அனுராதாபுரம தொடர் வண்டி நிலையத்திலும் சிங்களப் படையினர் தாக்கித் துன்புறுத்தியிருக்கின்றனர்.

கண்காணிப்புக்கென திறந்த இழுவை ஊர்திகளிலும், மலையுந்துகளிலும், சுமையுந்துகளிலும் படைத்

(4-ஆம் பக்கம் பார்க்க)

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பகிவஎண். TN/MS(C)657

**உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள்:**

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை;

அனுப்புதல்:
**'தமிழ் நிலம்'**
5, அருணசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டுக் கட்டணம் ரூ. 36/-
அரையாண்டுக் கட்டணம் ரூ. 18/-

பெறுநர். நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியீட்டுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார், அச்சிடுவோர்: 'தென்மொழி' அச்சகம், 5, அருணசலத் தெரு, சென்னை-5.